Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 31 வெள்ளிக்கிழமை (16-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 255

★ தாமரைக்கிழங்கு, பப்பாளிக்காய், மரவள்ளி எத்தனை நாட்களுக்குச் சாப்பிடுவது?

# முல்லையில் ஒருலட்சம் மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில்!

## இன்றுமறியற்போர்

யாழ்ப்பாணம், ஆக. 16

உலர் உணவு நிவாரண விநியோகத்தை அரசு திடீரென நிறுத்திய செயலைக் கண்டிக்கும் வகையில், இன்று யாழ். செயலகம் முன்பாக பெரும் மறியற் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழர் நலன் காக்கும் ஒன்றியம் [யாழ். மாவட்டம்] ஏற்பாடு செய்துள்ள இந்த மறியற் போராட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் உட்பட பல பொது அமைப்புக்களும் பங்கு கொள்கின்றன.

காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ள மறியற் போரினால் இன்று யாழ். செயலகத்தில் வழமையான வேலைகள் ஸ்தம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஓ-5]

## உலர் உணவு நிறுத்த முடிவு; மறுபரிசீலனை செய்யப்படும்?

யாழ்ப்பாணம், ஆக. 16

அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில்லை என்ற முடிவு மறுபரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைப்பது முற்றாகவே சாத்தியமில்லை.

இவ்வாறு உலர் உணவு நிவாரண நிறுத்தம் சம்பந்தமாக கொழும்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுவிட்டுத் திரும்பிய யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெளிவுபடுத்தியதாவது:-

உலர் உணவு நிவாரண நிறுத்தத்தால் பாதிக்கப்படும் மக்கள் நிலை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினேன்; அவரது பணிப்பின்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு தளர்வின் பின் வடக்கே 30 லொறிகள்!

### மேலும் வரும் எனத் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 16

ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர் வவுனியாவுக்கு வடக்கே வர முதல் தடவையாக 30 லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ் அரச அதிபர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நீண்ட நாட்களாக தரித்து நின்ற இரு நூறுக்கு மேற்பட்ட லொறிகளை வடக்கே செல்ல அனுமதிக்குமாறு படை உயர் அதிகாரிகளை தாம் கேட்டுக் கொண்டதாகவும் அதற்கு இணங்க நேற்று முன்தினம் 30 லொறிகள் வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடனும், மண்ணெண்ணெய்யுடனும் மேலும் லொறிகள் இவ்வாரம் வந்து சேரும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த லொறிகளை துரிதமாக சோதனை செய்து அனு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## எழுதுவினைஞர் பதவிகள்; போட்டிப் பரீட்சை நடக்கும்

### யாழ். அரச அதிபருக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் உள்ள சுமார் 500 எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்களையும் போட்டிப் பரீட்சை நடத்தி நிரப்ப யாழ். அரச அதிபருக்கு பிரதமர் அதிகாரம் வழங்கியுள்ளார்.

கடந்த புதன்கிழமை பிரதமர் அலுவலகத்தில் நடந்த மாநாட்டில் அரச அதிபர் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையிடம் இருந்து தாதரங்கள் குறித்த விவரங்களைப் பெற்று, பத்திரிகைகள் மூலம் விண்ணப்பங்கள் கோரி, போட்டிப் பரீட்சையை [illegible] இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார். [இ-3]

## தடைகளை நீக்கக்கோரி பேரணி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 16

சனசக்தித் திட்டம், உணவு முத்திரை விநியோகம், உணவு நிவாரண வழங்கல் ஆகியவற்றை ஸ்ரீலங்கா அரசு திடீரென நிறுத்தியதாலும், பொருளாதாரத் தடையை விதித்ததனாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்சமயம் வதியும் ஒரு லட்சத்து பத்தாயிரம் தமிழர் பட்டினிச் சாவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்!

பட்டினிச் சாவிலிருந்து தங்களைக் காப்பாற்றக்கோரி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை அந்த மாவட்ட மக்கள் நேற்று முன்தினம் நடத்தினர்.

புதுக்குடியிருப்பு சிவன் கோவில், கந்தசுவாமி கோவில் ஆகிய ஆலய முன்றல்களில் இருந்து புறப்பட்ட பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கு கொண்டனர்.

தாமரைக் கிழங்கு, பப்பாளிக் காய், மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றை எத்தனை நாட்களுக்கு உணவாகக் கொள்ள முடியும் என்று கேட்கும் வகையில்—

ஊர்வலத்தில் கலந்து கொண்ட பலரும் அவற்றை வாயில் கடித்த வண்ணம் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது. மக்களின் பட்டினி நிலையை விளக்கியும் அத

[3 ஆம் பக்கம் பார்க்க]

## எதிர்க் கட்சிகளும் கண்டனம்

கொழும்பு, ஆக. 16

முகாம்களில் தங்காமல் வெளியே வசித்து வரும் சுமார் பத்து லட்சம் அகதிகளுக்கு உணவு நிவாரணம் வழங்குவதை நிறுத்துவது என்ற அரசின் முடிவை 12 எதிர்க்கட்சிகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

## லொறி விபத்தில் உதவியாளர் பலி

யாழ்ப்பாணம். ஆக. 16

நேற்று யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த லொறி ஒன்று கிளிநொச்சி கரடிப்போக்குப் பகுதி மதகு ஒன்றில் மோதிக் குடைசாய்ந்தது.

இந்த விபத்தில் லொறியின் உதவியாளரான ஊரெழுவைச் சேர்ந்த தர்மகுலம் என்பவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-126)

## அவ்ரோ குண்டு வீச்சு!

தென்மராட்சி, ஆக. 16

ஆனையிறவு, இயக்கச்சிப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 9 30 மணியளவில் 'அவ்ரோ' குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியது

அதேதினம் இரவு 11 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குப் பகுதியிலும் விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றது. (ஓ-117-15)

## வெட்டுக்காயங்களுடன் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 16

தலை, உடல் எங்கும் கோடரி வெட்டுக்காயங்களுடன் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நவக்கிரியைச் சேர்ந்த அருணாசலம் கைலாய பிள்ளை (வயது [illegible]) என்பவரின் சடலமே வெட்டுக் காயங்களுடன் ஒப்படைக்கப்பட்டது. (உ-15)

## ஆனையிறவில் மோதல்

யாழ்ப்பாணம், ஆக. 16

ஆனையிறவு முகாமின் தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் மோதல்கள் இடம்பெற்றன.

இராணுவத்தினருக்கு உதவியாக விமானப் படையினர் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தினர்.

இதேசமயம், கட்டைக்காட்டுப் பகுதியிலும் நேற்று முன்தினம் சண்டை நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க —

ஆனையிறவு இராணுவ முகாமின் தென்பகுதியில் 2 கிலோமீற்றர் வரையான பிரதேசத்திலும் வடக்குப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் பிரதிநிதிகளை பிரட்மன் சந்திக்கமாட்டார்

### தனிப்பட்ட விஜயம் என்கிறது அரசு

கொழும்பு, ஆகஸ்ட் 16

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக லண்டனில் திரு. கிட்டுவை திரு. பிரட்மன் வீரக்கோன் சந்திக்கலாம் என்று 'இந்து' பத்திரிகையை ஆதாரங்காட்டி ''ஐலண்ட்'' வெளியிட்ட செய்தி பொய்யானது; விஷமத்தனமானது.

ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

மக்கள் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணும் நோக்கத்துடன் இச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு. வீரக்கோன் இம்மாதம் நான்காம் திகதி முதல் தனிப்பட்ட விடுமுறையில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### சார்க் மாநாட்டுக்கு வரும்

## இந்தியத் தலைவர்களின் பாதுகாப்புக்கு இந்தியாவிலிருந்து அதிகாரிகள்

கொழும்பில் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள வரும் இந்தியத் தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க இந்தியாவில் இருந்தே பாதுகாப்பு அதிகாரிகளும் வருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சார்க் விளையாட்டுப் போட்டிகளில்கலந்துகொள்ள கொழும்புவரும் இந்திய வீரர்களுக்கும் இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகளே பாதுகாப்பு வழங்குவர் என்றும் கூறப்படுகிறது.

சார்க் மாநாட்டின் போது கொழும்பில் மின்னல் வேகத் தாக்குதல்களை நடத்த விடுதலைப்புலிகள் திட்டமிடக்கூடும் என்று இலங்கையும் இந்தியாவும் அச்சப்படுவதாக 'த ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-0361]

ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டி [Cutters] லதக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். நியூவே றெக் கோடிங் சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். [17486]

குரக்கன் ஓட்டு தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0363)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 33 வயது நியூசிலாந்தில் P.H.D. படிக்கும் மணமகனுக்கும், 32 வயது U.K யில் B. Sc. Accountant ஆக பணியாற்றும் மணமகனுக்கும் பெண் தேவை. இருவரும் மகம் நட்சத்திரம். கிரகபாவம் குறைந்த ஜாதகம் தொடர்பு ABCDE இல. 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [17492]

### தவறிவிட்டது

வல்லிபுரம் சூரியகுமாரி ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும், பல்கலைக் கழக அடையாள அட்டையும் பேர்சுடன் 13-8-91 இல் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். [17819]

### புதிய மீரா நாவல்

முடிவல்ல ஆரம்பம், இருள் இரவில் அல்ல நாவல்களை ரசித்துப் படித்த வாசகர்களுக்கு இந்நாவல்களை எழுதிய, சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய இன்னொரு வித்தியாசமான சமூக நாவல் ''முள்முடி மன்னர்கள்'' விற்பனையாகின்றது. (17804)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும், கைரேகை, எண்சோதிடம் பார்க்கவும் தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [17811]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், சொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைலகாலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4818]

## ரூ. 5,000 காசுக் கட்டளை

கொழும்பு, ஆகஸ்ட் 16 ஆகக் கூடியது 5 ஆயிரம் ரூபா வரை காசுக் கட்டளை மூலம் பணம் அனுப்ப தபால் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இதுவரை ஆயிரம் ரூபா வரையே காசுக் கட்டளை மூலம் பணம் அனுப்ப அனுமதிக்கப்பட்டு வந்தது.

(இ-எ)

---

# NEW SCIENCE ACADEMY

**JAFFNA.**

## PHYSICS

திரு. S. கணேசன் B. Sc.

**92** - Light - Mon., Wed. } 2.30— 4.00

Heat - Sat., Sun. } 9.00—10.00

**91** - Propeties of Matter

Mon. — 1.00—2 30

குறிப்பு:

திரு. நந்தகுமார ஆசிரியரின் வகுப்புகள் யாவும் 19 - 08 - 1991 முதல் திரு. S. கணேசன் ஆசிரியர் அவர்களால் தொடர்ந்து கற்பிக்கப்படும்.

**ஆரம்பம்: 19 - 08 - 1991**

Mon. 1-00 p. m.

(சி-0357)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மாதாவின் மடியில்:
25-7 1938

பிதாவின் அடியில்:
16 8-1989

அமரர்

## A. P. தணிகாசலம்

(முகாமையாளர், மக்கள் வங்கி, களுவாஞ்சிக்குடி)

ஆண்டு இரண்டு சென்றாலும்
அழியவில்லை தங்கள் நினைவு - வீட்டில்
காண்பவை எல்லாமே
கதைசொல்லும் தங்கள் அன்பை
காலத்தின் கொடுமையிலே காரிருளின் மத்தியிலே
கலங்க விட்டு போனீர்களே கடவுளின் கரத்தினுள்
தாங்க முடியவில்லை டடா உங்கள் பிரிவினை
தவிக்கும் எம் குரல் எட்ட வில்லையோ உம்செவிக்கு.

உங்கள் ஆத்ம சாந்திக்காக நிதமும் மன்றாடும்,

அன்பு மனைவி, மக்கள்.

'தணி',
கரவெட்டி கிழக்கு.
கரவெட்டி.

(17491)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
03 - 03 - 1936

இறப்பு:
29 - 07 - 1990

திதி:
16 08 - 1991

அமரர்

## மாரிமுத்து சின்னத்தம்பி (M. S)

(சிவா பிறதர்ஸ் உரிமையாளர், வவுனியா)

தந்தையே! ஓராண்டு நிறைவுறும் இவ்வேளையில் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பெரிய விளாத்திக்குளம்,
ஓமந்தை.

(17629)

---

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய

## வருடாந்த மஹோற்சவம்

கொடியேற்றம்
16-08-91 வெள்ளிக்கிழமை பகல் 12- 15 நி.
பக்தமுத்தி பாவனோற்சவம்
20-08-91 செவ்வாய்க்கிழமை முற்பகல்
நவசக்தி அர்ச்சனை
21-08-91 புதன்கிழமை முற்பகல்
திருவிளக்குப்பூஜை
22-08-91 வியாழக்கிழமை பிற்பகல்
வேட்டைத்திருவிழா
23-08-91 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00மணி
தேர் வீதி உலா
24-08-91 சனிக்கிழமை முற்பகல் 11-00மணி
தீர்த்தோற்சவம்
25-08-91 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00மணி
பகல் விழா 7-30—12-30 பிற்பகல் விழா 3-00—7-00
வருடாந்த மகாசபை
27-08-91 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00மணி.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
ஆலய பரிபாலனசபை.

(17818)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணகம்:
22 — 02 — 1950

விண்ணகம்:
16 — 08 — 1990

## கணபதி அருளானந்தம்

(சித்தப்பா - சாரதி)

அன்பிலே தந்தையாய்
அரவணைப்பிலே அன்னையாய்
துயர் தெரியாமல் காத்திட்ட - நீ
தூக்கத்தில் நித்தியமாய் போனதென்ன
கல்லறையில் உன்னை வைத்து
கண்ணீரால் மூடி விட்டோம்
விண்ணுலகம் நீ சென்றாய்
வேண்டிடுவாய் எம்மவர்க்காய்.

மனைவி, மக்கள், தந்தை,
சகோதரி, மருமக்கள்,
நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

46, இராசேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

[17795]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
7 - 3 - 1923

உதிர்வு:
17 - 7 1991

அமரர்

## புண்ணியமூர்த்தி கணேசமூர்த்தி

அன்பின் திருவுருவே! குடும்பத்தின் ஒளி விளக்கே! உங்கள் அன்பு முகம் எம் மனதை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் நாளான இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(17817)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மறியற் போர் மக்கள் உரிமை

அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருப்பவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டதை எதிர்த்து, யாழ்ப்பாண மாவட்ட மக்கள் இன்று மறியற் போராட்டம் ஆரம்பிக்கிறார்கள்.

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் மட்டுமன்றி, குடாநாட்டு மக்கள் சகலரும் ஒன்றிணைந்து இந்த மறியற் போராட்டத்தில் குதிக்கிறார்கள்.

இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தை அரசு நிறுத்தியமை மிக மிக அநீதியானது என்பதையும், அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளையும் ஏற்கனவே இரண்டு பகுதிகளாக இப்பத்தியில் விவரித்திருந்தோம்.

நிவாரண நிறுத்தம் உடல் ஆரோக்கியத்தை மட்டுமன்றி சமூக ரீதியான பாதிப்புகளையும் உண்டாக்கும் என்று வைத்தியத்துறைப் பேராசிரியர் நந்தி கருத்தரங்கு ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கிறார். நாட்டின் அரசியல் பிழைத்தால் சமூகம் சுகமாக - ஆரோக்கியமாக - வாழ முடியாது என்பதையும் அவர் எடுத்தியம்பி உள்ளார்.

இதற்கிடையில், நிவாரண நிறுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயம் நிறைந்ததா என்ற ஒரு கேள்வியும் கிளம்பாமல் இல்லை. அரசாங்கத்துக்கு எதிராகத் தமிழ் மக்கள் போராடுகிறார்கள். அவ்வாறிருக்க, நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரசைக் கேட்பது எப்படி? அது எங்ஙனம் நியாயமாகும்? — என்ற வாதம் ஒன்று நிலவுகிறது.

தமிழ் மக்கள் உரிமைப் போராட்டம் நடத்துகிறார்கள். அது உண்மை. அந்தப் போராட்டம் அரசுக்கு எதிரானது. அதுவும் உண்மையே. அரசாங்கம் தமிழர்களின் உரிமைகளை உரிய விதத்தில், உரிய அளவில், உரிய காலத்தில் வழங்கி இருந்தால் இப்போதைய அரசியல் போராட்டம் நிகழ்ந்திருக்காது.

போராட்டம் நடத்தியும், அரசு தமிழர்களின் உரிமைகளை வழங்குவதாக இல்லை. அதனால் கேட்டு வாங்குவதற்குப் பதிலாக, அடித்துப் பெற வேண்டிய தேவையை கொழும்பு அரசாங்கங்களே உருவாக்கின. தமிழர்களுக்கு இப்போது தேவைப்படுவது ஒன்றுதான். அதுவே தனியரசு.

அந்தத் தனியரசை உருவாக்க அனுமதியாது, தமிழர்களைத் தனது பிரசை என்றே கொழும்பு அரசு கூறிக்கொள்கிறது. அவ்வாறு தமிழர்கள் மீது உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் வரை, அவர்களுக்குரிய சகல தேவைகளையும் செய்தாக வேண்டிய முழுக் கடப்பாடும் கொழும்பு அரசுக்கே உண்டு. அந்தக் கடமைகளைச் செய்ய அது விரும்பாவிடில், செய்ய மறுத்தால் தமிழர்கள் தனியரசு நிறுவ விட்டு விடவேண்டும்.

தமிழர்களைத் தனது பிரசை என்று அரசு உரிமை கொண்டாடும் வரை, அவர்களின் தேவைகளை வழங்கியே ஆக வேண்டும். அந்தத் தேவைகளைக் கேட்டு நடத்தப்படும் போராட்டங்கள் தமிழர்களுக்குள்ள உரிமை. இன்றைய மறியற் போராட்டமும் அவ்வாறே.

தமிழர்களுக்கென்று தனியரசு மலர்ந்துவிட்டால் கொழும்பு அரசிடம் எந்தத் தமிழனும் உணவுப் பொருளையோ, வேறு உதவிகளையோ, நிவாரணத்தையோ கேட்கமாட்டான். கேட்கும் தேவையும் இருக்காது.

## ப. நோ. கூ. சங்க தலைவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 16

ப. நோ. கூ. சங்கத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு கோண்டாவிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல தலைவர்களையும் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்க் கிளை

யாழ்ப்பாணம், ஆக. 16

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் கோப்பாய்க் கிளை, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்னால் உள்ள கட்டடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குத் திறந்து வைக்கப்படுகிறது. [இ]

## ஊர்காவற்றுறை தபால்கள்

யாழ்ப்பாணம், ஆக. 16

ஊர்காவற்றுறையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த, ஊர்காவற்றுறை, கரம்பன் மேற்கு, கரம்பன் தெற்கு, கரம்பன் கிழக்கு, நாரந்தனை வடக்கு, நாரந்தனை தெற்கு, சுருவில், புளியங்கூடல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்களுக்குரிய கடிதங்களையும், தேசிய சேமிப்பு வங்கிக் கணக்குப் புத்தகங்களையும் யாழ். பிரதம தபாற்கந்தோரில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையான கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (த)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 16

கட்டைக்காட்டுப் பகுதியில் கடந்த மாதம் 22 ஆம் திகதி நடந்த மோதலில், கப்டன் அரசன் [சோமசுந்தரம் யோகேந்திரன் — அரியாலை] வீரமரணமடைந்தார்.

இதேசமயம் ஆனையிறவில் கடந்த மாதம் 10 ஆம் திகதி நடந்த மோதலில் வீரவேங்கை திலகன் [திருச்செல்வம் கஜேந்திரன் — பாஷையூர்] வீரமரணமடைந்தார். [ஒ]

## காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 16

வடபகுதிக்கு வெளியே செல்வதற்காக ஜூன் 20 ஆம் திகதியில் இருந்து ஜூலை 14 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி அட்டைகளை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

### சர்ச்சைக்குரிய கப்பலான

## 'அமேசன்' மூலமும் வடக்கே உணவுப் பொருள்கள் வரும்!

கொழும்பு, ஆக. 16

வடபகுதி மற்றும் மன்னார் மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'அமேசன்' என்ற கப்பலும் பயன்படுத்தப்படவுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் மேலதிக செயலாளர் நாயகம் சமர்ப்பித்த விண்ணப்பத்தைக் கொழும்பு மேல் நீதிமன்றம் ஏற்றுள்ளது.

அந்தக் கப்பலின் உரிமையாளர் டார் என்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்த விசாரணை முடிவடையும் வரை கப்பலைத் தடுத்து வைக்கும் உத்தரவை நீதிமன்றம் முன்னர் பிறப்பித்திருந்தது.

ஒரு லட்சம் அமெரிக்க டொலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இக்கப்பல் இலங்கைக் கடல் எல்லையை விட்டு வெளியே செல்லக் கூடாது என்று கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. [இ-எ]

## போர்க்கால கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஆக. 16

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் யாழ் மாவட்டத்தில் பரவலாக போர்க்கால கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்றிரவு தீவகப் பிரிவில் வேலணை, புங்குடுதீவு தல்லைப்பற்று, இறுப்பிட்டி துர்க்கை அம்மன் கோயிலடி ஆகிய இடங்களிலும்—

வலிகாமத்தில் சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை ஐங்கரன் சனசமூக நிலையம், கோப்பாய், ஆவரங்கால், நவக்கிரி குட்டி பாலர் பாடசாலை ஆகியவற்றிலும்—

தென்மராட்சியில், சாவகச்சேரி கல்வயல் பாடசாலை, கொடிகாமம் மிருசுவில் றோ.க. பாடசாலை ஆகியவற்றிலும்—

வடமராட்சியில் கரவெட்டி, வல்வெட்டித்துறை இந்து த. க. பாடசாலை, பருத்தித்துறை சுப்பர் மடத்தடி ஆகிய இடங்களிலும் போர்க்கால கருத்தரங்குகள் நடைபெற்றன. [உ]

### ராஜீவ் கொலை விசாரணை:

## சயனைட் மரணங்களால் தடுமாறும் பொலீஸார்!

சென்னை, ஆக. 16

முக்கிய சந்தேக நபர்கள் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டதால் ராஜீவ்காந்தி கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலீஸார் விரக்தியடைந்துள்ளனர்.

இப்படி சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விசேட புலனாய்வுப் பொலீஸ் குழு அதிகாரி ஒருவர், ''சயனைட் வில்லைகள் எமக்கு பெரிய தலையிடியைக் கொடுத்து வருகின்றன'' என்று குறிப்பிட்டார்.

''இதன் மத்தியிலும் சில போராளிகளை உயிருடன் நாம் கைது செய்ய முடிந்தது எமது அதிஷ்டமே'' என்றும் அவர் கூறினார்.

ராஜீவ் கொலை தொடர்பாக 14 தமிழர்கள் (பெரும்பான்மையோர் இலங்கையர்) கைதாகியுள்ளனர். வேறு மூவர் கைதாகும் முன்னர் சயனைட் வில்லைகளை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, கோயம்புத்தூரில் கைதாகும் முன்னர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்ட இரண்டு போராளிகள், அதற்கு முன்னர் விசேட புலனாய்வுக் குழுத் தலைவர் டி. ஆர். கார்த்திகேயனை பாராட்டி எழுதிய குறிப்பு ஒன்றை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர் என்று யு. என். ஐ அறிவித்திருக்கிறது.

''உங்கள் முயற்சியை நாங்கள் பாராட்டுகின்றோம்'' என்று அந்தக் குறிப்பில் எழுதப்பட்டிருந்ததாம். (இ - எ)

## பயணிகள் அவலம் நீக்க அரச அதிபர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஆக. 16

நொச்சிமோட்டைக்கும் தாண்டிக்குளத்துக்கும் இடையில் பயணிகள் எட்டு மைல் தூரம் நடந்து செல்லும் அவலத்தைப் போக்க நடவடிக்கை எடுங்கள்.

பாதுகாப்பு அமைச்சு செயலாளரை யாழ். அரச அதிபர் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

தாண்டிக்குளத்தில் லொறிச் சாரதிகள் மீது படையினர் மேற்கொள்ளும் அத்துமீறல்களை நீக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அவர் கோரினார்.

இந்த இரு விடயங்கள் குறித்தும் உடன் நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சு செயலாளர் அரச அதிபரிடம் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.



## மானமிக வாழ மதி தருவாய்!

இராகம்: காபி தாளம்: ஆதி

**பல்லவி**

கானமயில் வள்ளி கருத்துக்கு இசைந்த கந்தா
ஊனமொன்றில்லாத எழில் வாழ் வெமக்களிப்பாய்
-கானமயில்

**அனுபல்லவி**

மோன நிலை நீக்கியே முழுமையாய் எமை நோக்கி
ஆன வாழ் வெமக்களிப்பாய் அல்லலும் தீர்த்திடுவாய்
-கானமயில்

**சரணம்**

தீனர்தம் குரல் கேட்டுத் திசையெல்லாம் முகம்நோக்கி
ஈனராய் மண்ணிலிங்கே இயங்கித் தொலையாமல்
மானமிக வாழ்வதற்கு மதிதருவாய் வேலவனே
வானமிசைத் தேவர்களும் வாழ்த்திடவே

— ஆ. நமசிவாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்க அநுராதபுரத்திலும், வவுனியாவிலும் மேஜர் தரத்தில் உள்ள அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அரச, கூட்டுத்தாபன, கூட்டுறவு அமைப்புகளின் லொறிகளை கட்டுப்பாடு இன்றி அனுமதிக்குமாறு படையினருக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [இ-3]

## ஒன்றுகூடல்

இன்று நடைபெறும் மறியற் போரில் கலந்து கொள்வதற்காக சகல வர்த்த ஊழியர்களையும் காலை 6 மணிக்கு சங்கப் பணிமனையில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. [ஒ-5]

## ஆனையிற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் ஒரு கிலோமீற்றர் வரையான பிரதேசத்திலும் அரசுப் படையினர் தமது நிலையை ஸ்திரப்படுத்தி வருகின்றனர் என்று விங் கொமாண்டர் மார்க்ஸ் செனவிரத்தினா நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வெற்றிலைக்கேணித் துறையில் இருந்து ஆனையிறவு முகாம் வரையான பிரதேசத்தையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர படையினர் முயற்சித்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-எ-15)

## முல்லையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னைப் போக்கக் கோரியும் அரசாங்க அதிபரின் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் பின்வரும் முக்கிய அம்சங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

★ போர் தொடங்கிய கடந்த 60 வாரங்களில் ஆறு வாரங்களுக்கு மட்டுமே உலர் உணவு கிடைத்தது.

★ முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரு லட்சத்துப் பத்தாயிரம் மக்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களில் இதுவரை பத்து சதவீதம் மட்டுமே கடல்மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் வந்துள்ளன.

★ விவசாயம், மீன்பிடி மற்றும் தனிப்பட்ட தொழில்கள் ஸ்தம்பித்ததால் மக்கள் பட்டினிச் சாவு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

★ எம்மீது விதிக்கப்பட்ட தடைகள் யாவும் நீக்கப்பட்டு. உணவுப்பொருள் மற்றும் எரிபொருள்களை அரசிடமிருந்து பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவும். [அ-126]

## புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லண்டன் சென்றிருக்கிறார்.

திரு. கிட்டுவையோ அல்லது திரு. திலகரையோ அல்லது லண்டன், பாரிஸ் மற்றும் வேறு இடங்களில் இருக்கக்கூடிய விடுதலைப் புலிகளின் பிரதிநிதியையோ சந்திக்க திரு. பிரட்மனுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. அவர் அப்படி சந்திக்கவும் இல்லை.

இப்படி ஜனாதிபதி செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

## உலர் உணவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் பிரதமர் தலைமையில் கடந்த புதன்கிழமை உயர் மட்டக்கூட்டம் ஒன்று பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது. வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களைச் சேர்ந்த பல அரச அதிபர்கள் அதில் கலந்து கொண்டனர்.

தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது என அங்கு உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது.

இடம் பெயர்ந்து அகதி முகாமுக்கு வெளியே வாழ்பவர்களின் நிலை குறித்து மறு பரிசீலனை செய்து விவரமான அறிக்கை ஒன்றைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு பிரதமர் கேட்டுள்ளார். அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இடம் பெயர்ந்தோருக்கு உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவது என்ற முடிவை மறு பரிசீலனை செய்ய அவர் சம்மதம் தெரிவித்துள்ளார்— என அரச அதிபர் கூறினார். (அ-3)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991 - 08 - 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 00 மணிக்கு தலைவர் பேராசிரியர் திரு. அ. துரைராசா அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளதென்பதை இக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

சி. கனகசபாபதி,
செயலாளர்.

(17803)



## வைத்திய சேவை

தலைமுடி உதிர்தல், தலைமயிர் நரைத்தல், கண் பார்வைக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சர்மரோகம், மாதவிடாய்க் கோளாறுகள் உட்பட, சகல வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

டாக்டர் த. சிவானந்தன் D. A. M., R. A. M. P. (Sri Lanka)
"சிவா வைத்தியசாலை",
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(17812)



## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

ஆகஸ்ட் 31 ஆம் திகதி நடைபெறவிருக்கும்
போட்டிப் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

★ தொடர்ந்து 10 தினங்கள்
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்

**ஆரம்பம்: 18 - 08 - 1991 9-00 a. m.**

★ அனுபவமிக்க ஆசிரியர்களின் இணைந்த சேவை
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 15/- மட்டுமே.

முன்னர் பயின்ற மாணவர்களுக்கு வகுப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன.

விவரங்களுக்கு:

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்

[சி-0285]


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தாய் மடியில்: | இறை அடியில்: |
| --- | --- |
| 29 | 09 |
| — | — |
| 10 | 08 |
| — | — |
| 1958 | 1989 |

அமரர்
டாக்டர் (செல்வி) சிங்கநாயகம் கலாநாயகி
(B S M. S., யாழ். பல்கலைக்கழகம், கைதடி.)

திதி: 16 08 1991

உன்பிரிவு மெய்யென்று சொல்ல
நினைவலைகள் விடுவதில்லை
எம்குடும்பப் பூங்காவில்
முதல் மருத்துவப் பூவாகி, காயாகி
கனிய முன்னர் காலனவன் கவர்ந்த
ஈராண்டு திதியின்று
ஈராண்டு ஆனாலென்ன
ஈராயிரம் ஆண்டுகள் போனாலென்ன
எங்கள் மனத்திரையில் உந்தன் நினைவுகள்
ஓடிக் கொண்டேயிருக்கும்.

என்றும் உன்நினைவால் வாழும்,
சகோதரர்கள், சகோதரிகள், பெறாமக்கள்,
மருமக்கள், மைத்துனர், மைத்துனிமார்.

வயாவிளான். (17814)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 16 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 'தராசு' வார இதழ் அலுவலக தாக்குதலில் இருவர் பலி!

## சந்திரகாசனின் அலுவலகமும் அதே கட்டடத்தில்

சென்னை, ஆக. 16

சென்னை - எழும்பூரில் உள்ள 'தராசு' வார இதழ் அலுவலகத்தினுள் கடந்த புதன் இரவு வன்முறைக் கும்பல் ஒன்று புகுந்து நடத்திய தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த அலுவலகம் இயங்கும் கட்டடத்தின் மொட்டை மாடியிலேயே இலங்கைத் தமிழ்ப் பிரமுகரான எஸ். சி. சந்திரகாசனும் தங்கி இருக்கிறார். அவரது "புரொடெக்" அலுவலகமும் அங்கேயே இயங்குகிறது.

ஒட்டோவில், தராசு அலுவலகத்திற்குச் சென்று இறங்கிய அந்தக் கோஷ்டியினர் கத்திகள் மற்றும் ஆயுதங்களினால் அலுவலகத்தில் அச்சமயம் இருந்தவர்களைக் கண்டபடி தாக்கினர்.

குத்துக் காயங்களுக்குள்ளான இலரை அக்கும்பல் அலுவலகக் கட்டடத்தின் 2 ஆம் மாடியில் இருந்து வெளியே தள்ளி விட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களில் ஒருவர் தராசு அலுவலகத்தின் கணக்காளர். மற்றவர் ஊழியர்.

அத்தாக்குதலில் 4 பேர் காயமடைந்தனர். தாக்குதலை நடத்திவிட்டு அக்கும்பல் தப்பியோடி விட்டது.

'தராசு' வார இதழ் ஆசிரியர் ஷியாம் தகவல் வெளியிடுகையில்,

அக்கும்பலைச் சேர்ந்தவர்கள் மதுபோதையில் காணப்படவில்லை என்றும், அவர்கள் வெளியூர் வாசிகளாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தராசு அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தின் ஒரு பகுதியில் தங்கி உள்ள திரு. சந்திரகாசனின் அறையை மூன்று பொலீஸார் காவல் புரிந்து வருகின்றனர். 'தராசு' அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் அந்த மூன்று பொலீஸாரும் ஒன்றுமே செய்யாது இருந்தனர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக புலனாய்வுத்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-எ)

## இலங்கை பணத்துக்கு வங்கியில் தங்கம்

இலங்கை மத்திய வங்கியில் இருந்து பொதுமக்கள் 22 கரட் தங்கத்தை சந்தை விலையில் இலங்கை ரூபாவைக் கொடுத்து வாங்கலாம் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கோட்டையில் உள்ள மத்திய வங்கியின் விற்பனை நிலையத்தில் இவ்விற்பனை இடம்பெறுகிறது.

எவ்வளவு தங்கத்தையும் கட்டுப்பாடு ஏதுமின்றி எவரும் வாங்கமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சவரன் தங்கம் 4,800 ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

இதுவரை காலமும் வெளிநாட்டுப் பணத்துக்கே தங்கத்தை மத்திய வங்கி விற்பனை செய்து வந்தது.


யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991 - 09 - 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**கணிதமும் / புள்ளிவிவரவியலும் / விலங்கியல்-சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்**

சம்பள அளவுத்திட்டம்:

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1
ரூபா:
9,600 - 8 x 250 - 11, 600/- மாதமொன்றுக்கு

2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11
ரூபா:
8, 000 - 5 x 250 - 9, 250/- மாதமொன்றுக்கு

3. உதவி விரிவுரையாளர்
ரூபா:
3,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஸ்தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1.50 முத்திரை ஒட்டப்பட்ட 23 x 10 ச.மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
[illegible]
[illegible]



## காணவில்லை

### ஆறுமுகம் வியாழம்மா

மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் வியாழம்மா [78 வயது] நேற்று நல்லூர் கொடியேற்ற உற்சவத்திற்குச் சென்று விட்டு, மீண்டும் வீடு வந்து சேரவில்லை. இவர் கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணம், 160, கோவில் வீதியிலுள்ள [நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகில்] அவரது மகனது வீட்டில் தங்கி இருந்தார்.

இவர் கடைசியாக நீல புள்ளிகளுடன் கூடிய பச்சை நிறமுடைய சேலையை அணிந்திருந்தார். இவரைப் பற்றித் தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து 160, கோவில் வீதியிலுள்ள எனது வீட்டிற்கு தகவல் தரவும்.

தகவல்:
ஆ. ஏகானந்தசிவம்
(மகன்)

(17496)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் நாகேந்திரம்

யாழ். மாநகரசபை சுகாதாரப் பரிசோதகரும், ஸ்ரீ கற்பகவிநாயகர், நல்லூர் தெற்கு ஆலய தர்ம பரிபாலனசபைத் தலைவருமாகிய வை. நாகேந்திரம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம், பாக்கியம் ஆகியோரின் மூத்தமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், ஜெயந்தா (வேம்படி மகளிர் கல்லூரி), கவிதா [திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலை] ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற வர்ணேந்திரம் (ஆசிரியர்), தெய்வேந்திரம் (யாழ். கல்வித் திணைக்களம்), இராசேந்திரம் (யாழ். விற்பனைத் திணைக்களம்), குமரேசன், திருமதி சிவமணி இரகுநாதன் (ஆசிரியை, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை), திருமதி சரஸ்வதி மகேந்திரன், திருமதி குணமணி சிறீஸ்கந்தராசா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 17, குறோசற் வீதி, நல்லூர் தெற்கில் இருக்கும் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக 17 - 8 - 91 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
கா. இரகுநாதன்.

[17821]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org